# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,915 — 1970 ජූලි 17 වැනි සිකුරාදා — 1970.7.17

14,915 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 229 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 231 |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### இரத்தோட்டைப் பட்டின சபை
### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்
#### 1970 க்கான விசேட மலகூட வரி

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆகிய பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் இரத்தோட்டைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே 1970 ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1970 ம் ஆண்டுக்கு இரத்தோட்டைப் பட்டின சபை விதித்திருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பா. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஜூலை மீ 1 ந உ.

7-679—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

### இரத்தோட்டைப் பட்டின சபை
### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்
#### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆகிய பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் இரத்தோட்டைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே 1970 ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்கு இரத்தோட்டைப் பட்டின சபை விதித்திருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பா. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஜூலை மீ 1 ந உ.

7-683—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆடு திசெம்பர் மீ 14 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## ஊர்காவற்றுறைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**1970 ம் ஆண்டுக்கான விசேட தண்ணீர்வரி**

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆம் பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் ஊர்காவற்றுறைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப்பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும், முறையே ஆனி 30, புரட்டாதி 30, மார்கழி 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்கு ஊர்காவற்றுறைப் பட்டினசபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பா. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 1 ந வ.

7-678—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## ஊர்காவற்றுறைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**1970 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆகிய பிரிவின் கீழும், சொல்லப்பட்ட பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் வழங்கப்பட்ட அங்கீகாரத்துடனும் ஊர்காவற்றுறைப் பட்டினத்துக்குள் அமைந்துள்ள நிலைபெயராத ஆதனங்கள் எல்லாவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே ஆனி 30, புரட்டாதி 30, மார்கழி 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைப் பணங்களாகக் கட்டப்பட வேண்டியதுமான ஒரு விசேட மலகூட வரியைத் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரையறைகள் விலக்குகள் ஆகியவற்றிற்கமைய ஊர்காவற்றுறைப் பட்டின சபை 1970 ம் ஆண்டிற்கு விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பா. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 1 ந வ.

7-692—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## அகலவத்தைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**1970 க்கான ஆதன வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 159 (1) ம் பிரிவின்படியும், அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் வழங்கிய அனுமதியுடனும், சபையினால் விதிக்கப்படக்கூடியனவாய வரையறைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் அகலவத்தைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள நெற்காணிகள், தவிரவுள்ள நிலையான ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும், முறையே ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு ஆதன வரியை 1970 ம் ஆண்டுக்கு அகலவத்தைப் பட்டின சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பா. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 1 ந வ.

7-684—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

**17 (5) ம் பிரிவின்படியான அறிவித்தல்**

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கனகநாயகம் நல்லைநாதன் ஆகிய நான், இதன் அட்டவணையின் முதலாம் பத்தியிற் குறிப்பிட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அட்டவணையின் இரண்டாம் பத்தியிற் குறிப்பிட்டுள்ள திகதியில், மூன்றும் பத்தியிற் குறிப்பிட்டுள்ள நேரத்தில், நான்காம் பத்தியிற் குறிப்பிட்ட இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
வவுனியா.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், வவுனியா,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 7 ந வ.

**அட்டவணை**

| பத்தி 1 கிராமச் சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| சின்னச் செட்டிகுளம் மேற்கு | 23.7.70.. | 10.00 மு.ப. .. | சின்னச்செட்டிகுளம் மேற்கு கிராமச் சபை அலுவலகம் |

7-589—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 36 ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 6 ந் உ.

### அட்டவணை

| வட்டார இலக்கம் | | அபேட்சகரின் பெயர் |
|---|---|---|
| | | **களுத்துறை மாவட்டம்** |
| | | **பேருவலை-அளுத்கம்-மாலவன் பத்த கிராமச் சபை** |
| 7 | .. | தொடங்கொட ஆரச்சிகே ஆரியநந்த |
| | | **நுவரெலியா மாவட்டம்** |
| | | **பள்ளேபன கிராமச் சபை** |
| 10 | .. | தசநாயக முதியன்செலாகே புஞ்சிபண்டா தசநாயக |
| | | **திருக்கோணமலை மாவட்டம்** |
| | | **தெகிவத்த கிராமச் சபை** |
| 4 | .. | செல்வராசா சோமசுந்தரம் |
| | | **அனுராதபுரம் மாவட்டம்** |
| | | **கலென்பிந்துனுவெவ கிராமச் சபை** |
| 18 | .. | ரங்கா வெல்பனிக்கியாகே கபுவா |

7 – 713—17.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,915

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11. 6 70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7 70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| ஓகஸ்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.